# குடியுரிமைத் தடையை நீக்குமாறு கோரி சிறிமா வழக்கு

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், அத்தனகல தொகுதி எம். பி. யுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, தமது குடியுரிமை பறிக்கப்படுவது சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அதே நேரத்தில், உயர் நீதிமன்றத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தாக்கல் செய்திருந்த வழக்கு சம்பந்தமான விசாரணை இன்று நீதியரசர்கள் திருவாளர்கள் ஜி. டி. சமரவிக்கிரம, வனசுந்தர, ஜனப் இஸ்மாயில் முன்னிலையில் ஆரம்பமாகிறது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சார்பில் சட்டத்தரணி திரு. நிமால் டி சில்வா வழக்கை தாக்கல் செய்திருந்தார். சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. எச். எல். டி. சில்வா திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சார்பில் இன்று ஆஜராவார்.

(8-ம் பக்கம் பார்க்க)

RECEIVED ... PERIODICALS DIVISION ... LIBRARY

ஈழநாடு ★

The Eelanaadu 60 சதம்

மலர் 22 புரட்டாதி 24 ஜுல்-கஃ 29 இதழ் 241

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10 - 10 - 80

★ ஈரான் - ஈராக் யுத்தத்தில் பயங்கர திருப்புமுனை

# ஈராக் ஏவுகணைத் தாக்குதல்!

# 60 பேர் பலி! 300 பேர் காயம்!

லண்டன், அக். 9

ஈரான்-ஈராக் யுத்தம், பயங்கரமான கட்டத்தை அடைந்திருப்பதாக யுத்த முனையிலிருந்து வெளிவரும் செய்திகள் அச்சம் தெரிவிக்கின்றன. குண்டுவீச்சில் தீவிரமாக ஈடுபட்ட இரு நாடுகளும் இப்பொழுது ஏவுகணைத் தாக்குதலில் இறங்கியிருப்பதாகவும், முதலாவது ஏவுகணைத் தாக்குதலை ஈராக் ஆரம்பித்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு ஈரானின் தென் மேற்கு மாகாணத்தில் ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் அறுபது ஈரானியர்கள் பலியானார்கள் என்றும் முன்னூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர் என்றும் தெஹ்ரான் வானொலி இன்று அறிவித்தது.

### ரடார் நிலையங்கள் சேதம்

ஈரானின் மற்றுமொரு மாகாணத்தில் நேற்று ஈராக் யுத்த விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு ரடார் நிலையங்கள் முற்ருக சேதம் அடைந்தன. வேறு இரண்டு ரடார் நிலையங்கள் செயலற்றுப் போயின.

பாக்தாத் வானொலிச் செய்திகளின் படி, ஈரானின் 27 டாங்கிகள் நேற்று நாசமாக்கப்பட்டன எனத் தெரிய வருகிறது.

### ஏவுகணைத் தாக்குதல்

ஈரான் - ஈராக் சண்டையில் ஏவுகணைகள் பயன்படுத்தப் படுவது இதுவே முதற்தடவையாகும். நேற்றிரவு ஈராக் நடத்திய திடீர் ஏவுகணைத் தாக்குதலில் பலியான ஈரானியர்களின் தொகை உடனடியாக மதிப்பிடப்படாத போதிலும், அறுபதுக்கும் அதிகமான ஈரானியர்கள் மாண்டதாக தெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளது.

ஏவுகணைத் தாக்குதலை ஈராக் தனது எல்லைக்குள் இருந்து கொண்டே நடத்தியது என்று செய்திகள் தெரிவித்தன.

### சோவியத் தலையிடாது

மாஸ்கோவில் நேற்றிரவு ஸிரியா அதிபருக்கு அளிக்கப்பட்ட விருந்தில் சோவியத் அதிபர் பிரஷ்நெவ் பேசுகையில், ஈரான்-ஈராக் சண்டையில் சோவியத் யூனியன் தலையிடமாட்டாது என்று உறுதி தெரிவித்தார்.

இந்த யுத்தத்தை மேலைநாடுகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் சோவியத் அதிபர் எச்சரித்தார்.

8-ம் பக்கம் பார்க்க

## கூட்டத்துக்கு அனுமதி மறுப்பு

(கண்டி)

கண்டியில் இன்று நடைபெறவிருந்த பிக்குகள் கூட்டத்திற்கு பொலிசார் தடை விதித்துள்ளனர்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் வகையிலேயே பிக்குகள் கூட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக மல்வத்தை மகாநாயக்க தேரோ கருத்து வெளியிடுகையில், உத்தேச பிக்குகள் கூட்டத்திற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினர்.

## 'சண்' வெளிநாடு பயணம்

[கொழும்பு]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. என். சண்முகதாசன் வெளிநாட்டுச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு கடந்த சனி புறப்பட்டுச் சென்றுள்ளார், முதலில் பாரிஸ் சென்றுபின்னர் லண்டன் செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பல நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்று சேர்ந்து நடாத்தும் முக்கிய பேச்சுவார்த்தையொன்றில் இவர் கலந்துகொள்வார்.

## தமிழ்நாடு சபாநாயகருக்கு இன்று மாநகரசபை தேநீர் விருந்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை வந்துள்ள தமிழ்நாடு சட்டப்பேரவை சபாநாயகர் திரு. ராஜாராம் இன்று பிற்பகல் விமானம் மூலம் பலாலி விமானநிலையம் வந்து சேர்வாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. ராஜாராமுடன் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் வருவார்கள்.

சுமார் மூன்று மணியளவில் பலாலி வந்தடையவிருக்கும் தமிழ்நாடு சபாநாயகரை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களும் எம். பிக்களும் வேறுபிரமுகர்களும், யாழ். மேயரும் வரவேற்பார்கள் என்று தெரிகின்றது.

திரு. ராஜாராம் யாழ்ப்பா

(5ம் பக்கம் பார்க்க)

## குடியுரிமை ரத்து ஊர்ஜிதம்

[கொழும்பு]

முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, முன்னாள் மேயர் பௌசி மற்றும் பதினொரு பேர் மீதும்; உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் தொடர்பாக நியமிக்கப்பட்ட இரண்டு ஆணைக் குழுக்கள் இவர்களது குடியுரிமை தகைமை நீக்கும்படி தெரிவித்த யோசனையை, மேன்முறையீட்டு நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்து நேற்று ஏற்றுக்கொண்டது. [ம]

## இலக்கிய நோபல் பரிசு

வார்ஸோ, அக். 9.

1980-ம் ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு, போலந்து நாட்டைச் சேர்ந்த கவிஞர் ஷெஸ்லோ மெலோஸ்-க்கு வழங்கப்பட்டுள்ளது.

ஓம்

ஸ்ரீராமஜெயம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

முக்கிய அறிவித்தல்

நவராத்திரி பூஜா ஆரம்பத்தில் நவக்கிரக ஆராதனம் ஒரு கிரியையாகக் கூறப்பட்டிருக்கிறது. இதைச் செய்து கிரகநாயகர்களின் அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டே நவராத்திரி பூஜை செய்வது முறையென வேதம், ஆகமம், கற்பம் ஆகிய சாஸ்திரங்கள் இயம்புகின்றன. நிற்க நாம் வழிபடும் தெய்வங்களில் விஷ்ணு, அம்பாளுக்குத்தான் விசேஷமாக நவக்கிரகம், நட்சத்திரம், ராசி முதலான தேவர்கள் அவர்களது தேகத்தில் வியாபித்து மக்களுக்கு சான்னித்தியமான அருளைக் கொடுக்கிறார்கள் என்பது வேதத்திலுள்ள உட்பொருளான கருத்தாகும்.''

ஆகவே புரட்டாதி மாத கடைசி சனிவார விசேட பூஜைகள் வழமைபோல் இவ்வாலயத்தில் நடைபெறும். அடியார்கள் சனீஸ்வர வழிபாடு செய்து சாந்தி பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்
பிரதமகுரு.
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

10-10-80. 7047

உ

சிவமயம்

நகுலேஸ்வரம்

(கீரிமலை)

அருள்மிகு ஸ்ரீநகுலேஸ்வர ஆலய

புரட்டாதி மீ" கடைசிச் சனி வார விசேட பூசைகள் கலிதீர்த்த நகுலேஸ்வரஸ்வாமி ஆலயத்தில் வெகுவிமரிசையாக நடைபெறும்.

அதிகாலை 5 மணி தொடக்கம் விசேட நவக்கிரக சாந்தி திலஹோமம் எள்தீபம் ஏற்றுதல் முதலியன வழமைபோல் நடைபெறும். அடியார்கள் அனைவரும் விரதமனுஷ்டித்து சங்கல்பம் செய்து கண்டகிதீர்த்த மாடி எள்தீபம் நவக்கிரகசாந்தி முதலியன நடாத்தி கலிதீர்த்த நகுலேஸ்வரபெருமானின் கிருபாகடாக்ஷத்தை பெற்றுய்வீர்களாக.

பி. ப. 4மணி தொடக்கம் அளவை அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களால் கலிதீர்த்த நகுலேஸ்வரன் என்ற பொருள் பற்றி சிறந்த உபந்நியாசம் நடைபெறும்.

கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஷை கோயில் ஆதீனகர்த்தா

நகுலேஸ்வரம்
(கீரிமலை)
8-10-80. 7040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலைப் பாவனைக்குரிய மேசை, வாங்கு, கரும்பலகை, தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம், டுப்ளிக்கற்றர் ஆகியவை விற்பனைக்குண்டு. 38, சீனிவாசகம் வீதி, கொட்டடி. 7024

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 7043

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 24-ம் திகதி (வெள்ளிக்கிழமை)

(10- 10 -1980)

மேடம்; களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். காதலர்களுக்கு மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

இடபம்: பலவழிகளாலும் பணம் பாழாகும். வேண்டாத விருந்தினர் வருகை வேதனையைத்தரும். நண்பர் ஒருவரின் உடல் நலன் பாதிக்கப்படலாம். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

மிதுனம்; இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல் பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும் பொதுப் பணிகளில் நாட்டம் பிறக்கும் சிறப்பான தினம்.

கடகம்; தொழில்துறையில் முன்னேற்றமான நாள் நீண்ட தூரப்பிரயாணத்திற்கும் இடமுண்டு. உழைப்பினால் பலனும் உற்சாகமும் பிறக்கும்.

சிங்கம்; வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும். பிறந்தகத்தில் இருந்து அழைப்பிதழ் கிடைக்கலாம். சகோதர வழியாலும் நன்மையுண்டு. முன்னேற்றமான நாள்.

கன்னி: நிதியில் முடக்கம் ஏற்படும் சிலர் வீண்பழிக்கும் இலக்காவார்கள் பயிர்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம். துணிச்சலுடன் எதிர் நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

துலாம்: இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும். பிறந்தகத்தின் நினைவு திடீரெனத் தலைதூக்கும். கடமையில் சோர்வு தென்படும் மனத்திடம் வேண்டும்.

விருட்சிகம்; கனிவான நினைவுகள் தலைதூக்கும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். தனச் சிறப்பிற்கும் இடமுண்டு.

தனுசு: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம். வீட்டில் சிறு பிணி தோன்றும் வரவில் மந்த நிலைதென்படும்.

மகரம்: ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் பிறக்கும். வாகனத்தின் மூலம் அதிக பொருள்வரவிற்கும் இடமுண்டு. விளைபொருள் விருத்தியும் வியாபாரத்தில் முன்னேற்றமும் உண்டு.

கும்பம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும் புத்திரர்களால் புகழும் கிடைக்கும் இறை நம்பிக்கை மேலிடும் இல்லத்தில் இனிமை தவழும்.

மீனம்: தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரிவிடக்கூடும். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்,

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

---

ரியூட்டறிமாணவி கொலைவழக்கு:

# "சசீதரன் காதல் பற்றிக் கமலம் கொலைக்குப் பின்பே தெரியும்"

## பல்கலைக்கழக மாணவன் கோணேஸ்வரமூர்த்தி சாட்சியம்

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

"சசீதரனுக்கும், கொலையுண்ட கமலத்திற்கும் காதல் தொடர்புகள் இருந்ததுபற்றி எனக்குத்தெரியாது இக்கொலைவழக்கு விசாரணை ஆரம்பித்த பின்னர் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்த போதுதான் சசீதரனுக்கும் கொலையுண்ட கமலத்திற்கும் காதல் தொடர்புகள் இருந்தனஎன அறிந்தேன்."

இவ்வாறு, பொலிகண்டி ரியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டமாணவி கமலத்தின் காதலனான சசீதரனுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகக் கல்வி கற்கும் புலோலியைச் சேர்ந்த சந்திரசேகரம் கோணேஸ்வரமூர்த்தி (வயது 19) குறிப்பிட்டார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து சாட்சியமளித்த கோணேஸ்வரமூர்த்தி குறிப்பிட்டதாவது:

"எனது தாயார் இறந்த காரணத்தினால் 21-2-80 அன்று நான் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து புலோலியில் உள்ள எனது வீட்டிற்கு வந்திருந்தேன். அப்போது என்னோடு எனது சகமாணவ மாணவிகளும் வந்திருந்தனர். 20-2-80 அன்று பிற்பகல் 5 மணிக்குப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து புறப்பட்ட நாங்கள் 21- 2- 80 அன்று காலை இங்கு வந்து சேர்ந்தோம்,

என்னுடன் வந்த சகமாணவ மாணவிகள் வெவ்வேறு இடங்களுக்குப் போய்த்தான் பின்னர் எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள். அன்று சசீதரனும் எனது தாயாரின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக எங்களுடன் வந்திருந்தார்? சசீதரனை அன்று பகல் 12 மணியளவில் எனது தாயாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு நின்றதை நான் அவதானித்தேன். மரணச்சடங்குகள் முடிவுற்றதும் அவர் எனக்குச் சொல்லிவிட்டே தனது வீட்டிற்குச் சென்றார்.

நான் பின்னர் 26- 2- 80 அன்று மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குப் போனேன். பின்பு சில நாட்களின்பின் நான் கொப்பளிப்பான் காரணமாகத் திரும்பவும் வீட்டிற்கு வந்தேன்.

நீதவான்:- சசீதரனுக்கும் கொலையுண்ட கமலத்திற்கும் காதல் தொடர்புகள் இருந்தது பற்றி உனக்குத் தெரியுமா?- முன்பு தெரியாது. பின்பு இக்கொலைவழக்கு ஆரம்பிக்கப்பட்டபின்னர் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்தபோது தான் சசீதரனுக்கும், கொலையுண்ட கமலத்திற்கும் காதல் தொடர்புகள் இருந்தனவென அறிந்தேன்.

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.பி. சபாரத்தினம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சட்:- உங்கள் அம்மாவின் பிரேதம் எங்கே தகனம் செய்யப்பட்டது?- ஆனைவிழுந்தான் மயானத்தில்.

நீதவான்:- உமது தாயாரின் பிரேதத்திற்கு யார் கொள்ளி வைத்தது?- நான்தான்.

நீதவான்:- சுடலையில் எத்தனை மணிபோல் மரணச் சடங்குகள் முடிவுற்ற ?- பகல் 12 மணிபோல்.

நீதவான்-- பின்னேரம் சுடலைக்குப் போனீரா?-ஆம்.

நீதவான்:- ஏன் போனீர்?- காடாத்திற்காக.

சட்:- சசீதரன் உமது ண்பர்?- ஆம்.

சட்:- உம்மோடு பல்கலைக் கழகத்தில் கல்வி பயில்கிறார்?- ஆம்.

சட்:- எவ்வளவு காலமாக உமக்கும் சசீதரனுக்கும் சிநேகிதம் இருந்தது?- ஒருவருடம். பல்கலைக்கழகத்திற்குச் சென்ற பின்னர்தான் அவருக்கும் எனக்கும் சிநேகிதம் ஏற்பட்டது.

சட்: நீரும் சசீதரனும் பல்கலைக்கழகத்தில் ஒரேஹோலில் தான் இருந்தீர்கள்? - ஆம்.

சட்: உமது தாயாரின் செத்தவீட்டிற்கு பல்கலைக் கழகத்திலிருந்து எத்தனைபேர் மட்டில் வந்திருப்பார்கள்? 8090 பேர்வரையில்

சட்: வந்தவர்கள் எல்லோரும் எப்போது திரும்பிப்பல்கலைக்கழகம் சென்றார்கள் என்று உம்மால் கூறமுடியுமா? - முடியாது.

சட்: சசீதரனும் சுடலைக்கு வந்தாரா? - நான் கவனிக்கவில்லை.

பருத்தித்துறைப் பொலிஸ் ஜீப்சாரதி திரு. ரீ. கே. சுகுணபால சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

கடந்த 21 - 2 - 80 அன்று நான் பருத்தித்துறைப் பொலிஸ் ஜீப் சாரதியாகக் கடமையாற்றினேன். அன்று இரவு 8-25 மணிபோல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் ஜீப்பைச் செலுத்திச் சென்றேன். பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட நாங்கள் நீதி மன்றவீதி கல்லூரிவீதி ஊடாகப் பருத்தித்துறை வாடிவீட்டிற்குச் சென்றோம். அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சென்று முனைகெஸ்ட்ஹவுசை அடைந்தோம். பின்னர் வல்லிபுரக்கோவில் றோட்டால் சென்று கொண்டிருந்தோம் அப்போது ஜீப்பின் லைட்டும் எரிந்து கொண்டிருந்தது.

ஆனைவிழுந்தான் சந்தியை அடைந்ததும் ஆனைவிழுந்தான் சந்தி றோட்டால் வலப்பக்கமாக திரும்பி கிராகேபட்டடிக்குகுப்போவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக ஜீப்பை அங்கு நிறுத்தினோம் சில நிமிடங்கள் ஆனைவிழுந்தான் சந்தியில் நின்றபின்னர் நாங்கள் நேரே செல்லத்தீர்மானித்தோம்.

"நேரே சென்ற நாங்கள் வீதியில் முதலாவதாக வந்த சந்தியால் வலப்பக்கமாகத் திரும்பி நெல்லியடிக்குச் சென்றோம். பின்பு நெல்லியடியில் சுற்றிவிட்டு பிரதான வீதியூடாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தை வந்தடைந்தோம். 'அப்போது நேரம் ஒன்பதே முக்கால் மணியிருக்கும்."

விசாரணை தொடர்ந்து நடைபெறும். (அ)

---

## நடனப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கலைக்கோயில் அமரகலா நாட்டியால மாணவிகளுக்கிடையே நடத்தப்பட்ட நடனப் போட்டியில் முதல் மூன்றிடங்களையும் பெற்ற மாணவிகளினது விபரம் வருமாறு:

ஆரம்ப பிரிவு

சு. சிவாஜினி, ந. கேதீஸ்வரி, கு. சுதாஜினி.

முதலாம் பிரிவு

சு. தர்மவதி, சி. அனுஷா, சி. கோணேஸ்வரி.

இரண்டாம் பிரிவு

ப. சுகர்ணலதா, நா. பத்மாவதி, சி. சியாமளா.

மூன்றாம் பிரிவு

சு. பேபிசகிலா, பா. பாலகௌரி, கு. பாரதி.

நடன அப்பியாசப்போட்டி

ஆரம்ப பிரிவு

க. சிவாஜினி, ந. கேதீஸ்வரி, ப. கௌசலா,

முதலாம் பிரிவு

த. மாலினி, [illegible]. ஸ்ரீநந்தினி, சு. சுகந்தி.

இரண்டாம் பிரிவு

சு. வினோதா, ப. பிரதீபா, சி. சியாமளா.

மூன்றாம் பிரிவு

சு. பேபிசகிலா, கு. பாரதி, பா. பாலகௌரி.

---

## கன்பொல்லை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பணக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் வேலைகளுக்கு செலவழிக்கும் பணத்தைக் குறைக்குமாறு அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கிடைக்கும் உதவிகளை கைநழுவவிடாது உரியபடி பயன்படுத்திக்கொள்ளவேண்டும். சில சுயஉதவி வீடமைப்பு திட்டங்களில் வீடு அமைப்பதற்கு வழங்கப்பட்ட சிமெந்தை வெளியில் விற்ற சம்பவங்களும் உண்டு. அதனால் எமக்கே கஷ்டம் என்பதை நாம் உணரவேண்டும்" என்றார்,

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், தேசிய வீடமைப்பு திணைக்கள உத்தியோகத்தர் திரு. பொன்னம்பலம் உட்படப் [illegible] பேசினர்.

இந்த அடிக்கல் நாட்டு வைபவத்தையடுத்து திரு. அமிர்தலிங்கம் மயிலிட்டி [illegible] நோய் வைத்தியசாலை [illegible] 35 வீடுகள் [illegible] திட்டத்தைத் [illegible] ஆரம்பித்து வைத்தனர். (அ)

---

"சாதிப் பிரச்னைக்கு

## பிரதிநிதித்துவங்கள் தீர்வாக மாட்டாது!"

(யாழ்ப்பாணம்)

"ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பயன்படுத்துவதென்றும், மாவட்ட அபிவிருத்திச் சபைகளில் மேலும் ஒடுக்கப்பட்ட பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இதைச் சாதிக்க முடியும் என்றும் சமீபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கருத்து வெளியிடிருந்தார். கடந்த கால அனுபவங்களிலிருந்து பிரதிநிதித்துவங்களோ, நியமனங்களோ சாதிப்பிரச்னைக்குச் சரியான தீர்வாகாது என்பதனை தமிழ் மக்கள் புரிந்து சொண்டிருப்பர். இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவரின் இக்கருத்து சரியானதாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.'

இவ்வாறு கெருடாவிலில் நடந்த வெகுஜன இயக்கக் கருத்தரங்கில் பேசும்போது அமைப்பாளர் கே. டானியல் கூறினார்.

திரு. கே. சங்கர் தலைமையில் நடந்த மேற்படி கருத்தரங்கில் திரு. டானியல் மேலும் பேசுகையில் "மாவட்ட அபிவிருத்தி சபையில் ஒடுக்கம்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதன் மூலம் இந்த சாதிமுறையைத் தீர்த்துவிட முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் பரிபூரணமாக நம்பினால் ஒடுக்கப்பட்டமக்கள் பிரதிநிதிகளுக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்கும் வகையில் அபேட்சகப்பட்டியலைத் தயாரிக்க வேண்டும்: அடக்கு முறைக்குள் வைத்திருந்தவர்கள் அதற்குப் பிராயச்சித்தமாக ஒரு சந்தர்ப்பத்தை இந்த மக்களுக்குக் கொடுத்து இவர்களின் மனிதாபிமானக் குணத்தைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்" என்றார்.

---

## உயிரைக் காப்பாற்றும் சேவை மகத்தானது

(மாவிட்டபுரம்)

"உரிய நேரத்தில் உரிய முறையில் முதலுதவி மற்றும் வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்ளாமையால் அநியாயமாக ஏராளமான மரணங்கள் சம்பவிக்கின்றன. கிராமங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்களும், சனசமூக நிலையங்களும் அவசர தேவைப்படைகளாக இயங்கி இப்படியான அநியாய மரணங்களை தவிர்க்க முன்வரவேண்டும். சேவைகளில் உயிரைக் காப்பாற்றுகின்ற சேவையானது மகத்தானது".

இவ்வாறு செண், ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் கமாண்டர் திரு. வெஸ்வின் பெர்னாண்டோ கொல்லங்கலட்டியில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசுகையில் கூறினார்.

மாவை. கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அதன் தலைவர் திரு. வ. சரவணமுத்து தலைமையில் நடந்த இவ் வரவேற்பு நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளது அணிவகுப்பும் முதலுதவி செய்முறைகளும் இடம்பெற்றன.

கமாண்டர் திரு. ஒஸ்வின் பெர்னாண்டோ தொடர்ந்து பேசும்போதுமுதலுதவிப்பயிற்சிகள் பெறாத மாணவர்களது கல்வி பூரணமானதாக இருக்க முடியாது என்றும் மாணவர்கள் முதலுதவியை முக்கியமானதாகக் கருதி பயிலவேண்டும்" என்றும் கூறினார்.

செண். ஜோன்ஸ்அம்புலன்ஸ் படைத்தலைவர் திரு. மலறி விஜயசேகராவும், திரு. சுகந்தன் இன்னாசித்தம்பி திரு. ஈ. பி. இராசையா ஆகியோரும் பேசினர். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈராக் தலைநகர்மீது மீண்டும் குண்டுவீச்சு!

# ஈராக் துருப்புகள் பின்வாங்குகின்றன?

## ஈரானுக்கு ராணுவ உதவி: சோவியத் மறுப்பு

லண்டன், அக். 9

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தை ஈரான் விமானங்கள் பலநாட்களுக்குப் பின்னர் மீண்டும் நேற்றுத்தாக்கின. 480 கிலோ மீட்டர் போர்முனை நெடுகிலும் ஈராக் துருப்புக்கள் பின்வாங்கி ஈராக் எல்லைக்குள் திரும்பிச்செல்வதாக ஈரான்செய்தி ஏஜன்ஸி தெரிவித்துள்ளது.

ஈரான் பீரங்கிப் படையினர் ஈராக்கின் இரு கப்பல்களை மூழ்கடித்து விட்டதாகச் செய்திகள்தெரிவிக்கின்றன.

### இராணுவ உதவி

இதே வேளையில் ஈரான்—ஈராக் யுத்தத்தினுல் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் பாரசீக வளைகுடா நாடுகளுக்கு அமெரிக்கா இராணுவ ஆயுதங்களை வழங்குமென்று அமெரிக்க வெளிநாட்டுத் துணையமைச்சர் திரு. கிறிஸ்தோபர் தெரிவித்துள்ளார்.

ஈரான்—ஈராக் யுத்தத்தில் சோவியத் யூனியன் தலையிடா விட்டாலும், ஈரான் மீது மீண்டும் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயலும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் முயற்சியை கடுமையாக எதிர்க்கப் போவதாக சோவியத் ஜனதிபதி திரு. பிரஷ்னேவ் தெரிவித்துள்ளார்.

### சோவியத் மறுப்பு

சோவியத்யூனியன் ஈரானுக்கு இராணுவ உதவியளிக்க முன் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட செய்தியை சோவியத் வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

அமெரிக்க கடற்படையின் 6வது பிரிவைச் சேர்ந்த இரண்டு போர்க் கப்பல்கள் பாரசீக வளைகுடாப்பகுதிகளுக்கு செல்லும் வழியில் நேற்று சூயஸ் கால்வாயைக் கடந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்—ஈராக் யுத்தத்தில் தமது வெளிப்படையான ஆதரவை ஈராக்கிற்கு வழங்கப் போவதாக ஜோர்டானும், வடயேமனும் தெரிவித்துள்ளன. (வெ)

## பாண்டியர்கால கல்வெட்டுக்கள்

சென்னை அக் 9.

கி. பி. 12ம், 13ம் நூற்றுண்டைச் சேர்ந்த பாண்டியர் ஆட்சிக்காலத்தில் நிலவிய பொருளாதார, சமூக நிலைமைகளை எடுத்துக்காட்டும் பழங்காலக் கல்வெட்டுக்கள் திருநெல்வேலி மாவட்டத்தின் சில இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (வெ)

## சென்னையில் தடை உத்தரவு

சென்னை அக் 9.

மதுரைநகரிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்துவதற்கு 15 நாட்களுக்கு தமிழ் நாடு அரசினுல் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் மேற்கொள்ளவிருக்கும் ஆர்ப்பாட்டங்களைக் கருதி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (வெ)

## சந்திப்பு

டோக்கியோ, அக். 9

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, ஜப்பானிய பிரதமர் திரு. சுசுக்கியுடன் இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு, நல்லுறவு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினுர். (இ)



(கொழும்பு)

யாழ்ப்பாணம் சந்தை கூடும் நகரத் தண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு மேலும் 30 லட்சம் டாலர் (ரூபா 5,08,50,000) உதவி அளிப்பதற்கான ஒரு திருத்தத்தில் நிதி திட்டமிடல் அமைச்சின் பதில் செயலாளர் திரு.சி. சண்முகம், அமெரிக்கத் தூதுவர் திரு. டொனல்ட் ஆர். துசெயின்ட் ஆகியோர் கைச்சாத்திட்டபோது எடுக்கப்பட்ட படம். பிரஸ்தாப திட்டத்துக்குக் கடன்வகையில் 20,00,000 டாலரும் (ரூபா 3,39,00,000) நன்கொடை வகையில் 10,17,000 டாலரும் (ரூபா 1,72,38,150) இந்தத் திருத்தத்தின் கீழ் கிடைக்கும். அமெரிக்க அரசாங்கம் குறித்த திட்டத்துக்கு வழங்கும் மொத்தக் கடன் தொகை 60,00,000 டாலராகவும் மொத்த நன்கொடை 15,17,000 டாலராகவும் இந்தத் திருத்தத்தின் மூலம் அதிகரிக்கிறது. அமெரிக்க, சர்வதேச அபிவிருத்திக்கான உதவி நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ரால்ப் சிங்கிள்டன் (இடதுபுறம்) இலங்கை நிதியமைச்சின் வெளிநாட்டு வளங்களுக்கான இயக்குநர் திருமதி எஸ். குறுப்பு ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## ‘உலகின்சகலநாடுகளுடனும் இலங்கை சமாதானமாக வாழ விரும்புகிறது’’

### மாஸ்கோவில் அமைச்சர் ‘லலித்‘

மாஸ்கோ, அக். 9

‘‘இலங்கை மக்கள் உலகின் சகல நாடுகளுடன் சமாதானமாக வாழவே விரும்புகிறுர்கள்.’’

இவ்வாறு மாஸ்கோவில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தின் போது உரையாற்றிய இலங்கை வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கூறினுர்.

அயல் நாடுகளுடனுன நட்புறவுக்கும் கலாசார உறவுகளுக்குமான சோவியத் கழகங்களின் யூனியன் இலங்கையிலிருந்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் தலைமையில் சென்ற பாராளுமன்றத் தூதுகோஷ்டிக்கு இங்கு வரவேற்புபசார மொன்றை அளித்தது.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது: ‘‘நட்புறவையும் வளமான ஒத்துழைப்புக்களையும் வளர்ப்பதற்கு எடுக்கப்படும் சகல செயல்முறை நடவடிக்கைகளையும் நாம் வரவேற்கிறோம். ரயர் தொழிலகம், உருக்குத் தொழிகம் மாவாலை போன்ற நமது வளமான பொருளாதார ஒத்துழைப்புக்களின் பலாபலன்களை இலங்கையில் நன்குணரப்பட்டுள்ளது. ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்கு இலங்கை தேநீர் விநியோகம் செய்தது குறித்து நாம் பெருமிதம் கொள்கிறோம்.’’ சோவியத் இலங்கை நட்புறவுக் கழகங்களின் நடவடிக்கைகள், இரு நாடுகளின் மக்களுக்கிடையிலான நட்புறவைப் பலப்படுத்தும் நோக்கம் கொண்டிருப்பதை வெகுவாகுப் பாராட்டுகிறேன்’’ என்றுர்.

# ஈராக்குக்கு இந்தியா உதவி? வாஷிங்டன் செய்திக்கு

## இந்தியா மறுப்பு!

புதுடில்லி, அக், 9

ஈரான்-ஈராக் யுத்தத்தில் ஈராக்கிற்கு உதவும்பொருட்டு இந்தியா உட்பட சில நாடுகளின் கப்பல்கள் ஜோர்தானுக்கு அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட வாஷிங்டன் பத்திரிகைச் செய்தியொன்று முற்றிலும் விஷமத்தனமானதென்று, ஆதாரமற்றதென்றும் புதுடில்லியில் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றித்தவறுன நோக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு வெளியிடப்பட்ட செய்தி இதுவென்று இந்திய வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஈரரன்-ஈராக் யுத்தத்தில் இந்தியா எந்தத் தரப்பையும் ஆதரிக்கவில்லையென்றும் அவர் உறுதியாகக் கூறினுர்.

ஈரான்-ஈராக் ஆகிய நாடுகளுடனும் இந்தியா நல்லுறவு கொண்டிருப்பதாகவும், ஈரான்-ஈராக் பிரச்னையை பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானமாகத் தீர்க்க அது விரும்புவதாகவும் அவ்வதிகாரி கூறினுர். (வெ)

## விண்வெளி வீரர்களுக்கு உயர் விருதுகள்

மாஸ்கோ, அக் 9.

விண்வெளி வீரர்களான யூரி ரோமாணன்கோவுக்கும், அர்னல்டோ தாமயயோ மென்டெஸுக்கும் சோவியத் ஜனதிபதி லியோனிட் பிரெஷ்னேவ் உயர் விருதுகளை வழங்கினுர்.

இவ்விருவரும் சோவியத் யூனியன் வீரர் பட்டத்தையும் லெனின் விருதையும். தங்க நட்சத்திரத்தையும், நட்சத்திரப் பதக்கத்தையும் பெற்றவர். சோவியத் விண்வெளி வீரரானயூரிரொமானன்கோவுக்கு இரண்டாவது தடவையாக தங்க நட்சத்திரப் பதக்கம் கிடைத்துள்ளது. மென்டஸ் கியூபாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அஸாம் பிரச்னை: கொள்கையளவில் உடன்பாடு

கௌகாத்தி அக், 9.

அஸாமில் வெளிநாட்டவர் பிரச்னைபற்றி உடன்பாட்டிற்கு வரமுன்னர் மத்திய அரசின் சர்வதேசக் கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய உள்துறையமைச்சர் திரு. ஸயில்சிங்கூறியுள்ளார்.

அஸாமில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள அனைவரையும் வெளியேற்ற வேண்டுமென்பது பற்றி கொள்கையளவில் அஸாம் மாணவர்களுக்கும், மத்திய அரசுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இப்பிரச்னை தொடர்பாக இப்போது கருத்துவேற்றுமைகள் குறைந்து விட்டதால், இதுதொடர்பாக [illegible]யில் மீண்டும் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைகள் [illegible] காலம் நீடிக்காதென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்

இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னர் மத்திய அரசு இது தொடர்பாக எதிர்தரப்புத் தலைவர்களுடன் விவாதிக்குமென்றும் திரு. ஸயில்சிங் கூறினுர்.

அஸாமில் சட்ட ஒழுங்குகள் முன்பிருந்ததைக் காட்டிலும் தற்போது மேம்பட்டுள்ளதாக அஸாம் கவர்னரின் ஆலோசகர் திரு. ராமமூர்த்தி தெரிவித்தார். (வெ)

## நவராத்திரி

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் நவராத்திரி விழா இன்று ஆரம்பமாகும். இவ்விழாவில் திருமுறைப் பாராயணம், அபிராமிஅந்தாதி [illegible] பஜனை, விசேடபூஜை ஆகியன இடம்பெறும். இம் மாதம் 19ம் திகதி மாலைமானம்பு உற்சவம் நடைபெறும். (வெ)

## புரட்டாதி கடைசி சனி

(மாவிட்டபுரம்)

கீரிமலை கிருஷ்ணர் தேவஸ்தானத்தில் புரட்டாதி கடைசிச் சனிக்கிழமையையொட்டி இம்மாதம் 11 ம்திகதி விசேட அபிடேக ஆராதனைகள் இடம் பெற உள்ளன.

அன்று எள்எண்ணெய் எரிப்பதும், கிரகதோஷ அர்ச்சனை, நட்சத்திர நாமார்ச்சனை என்பனவும் இடம்பெற உள்ளன.

கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்திலும் அன்றைய தினம் விசேஷ வழிபாடுகள் நடைபெறும்.

## சங்குவேலி கொலை: சந்தேக நபர்கள் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

சங்குவேலி கொலை தொடர்பாக றிமாண்டிலிருந்த சந்தேக நபர்கள் நால்வரும் மேல் நீதிமன்ற உத்தரவின் பேரில் தலா 2500 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சங்குவேலியைச் சேர்ந்த அருளம்பலம் தர்மராஜா என்பவரை வாளால் வெட்டியும் பொல்லு, இரும்புக் கம்பி என்பவற்றுல் தாக்கியும் கொலை செய்ததாக சங்குவேலி வடக்கைக் சேர்ந்த கந்தையா, ரவீந்திரன், கந்தையா பத்மநாதன் கணபதிப்பிள்ளை சிவலிங்கம், முருகேசு நடராசா ஆகியோர் சுன்னுகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது றிமாண்டில் வைக்கப்பட்டனர், இவர்களைப் பிணையில் விடுமாறு விண்ணப்பம் ஒன்றை யாழ். மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணி எஸ். தவராசா, சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆகியோர் தாக்கல் செய்ததையடுத்து பிணைக்கான அனுமதி கிடைத்தது.

இதனையடுத்து இந்நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்செய்யப்பட்ட சமயம் தலா 2500 ரூபா உறுதிப்பிணையில் செல்ல நீதிபதி திரு. சி, ஆர். இராஜசிங்கம் அனுமதித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆண்டவனுடைய அருட்காற்று இரவு பகலாக உன் தலைக்குமேலே வீசிய வண்ணம் உளது. வாழ்வு ஆகின்ற சமுத்திரத்தில் நீ வேகமாக முன்னேற விரும்புவாயாகில், உனது மனமாகிற படகு உளதே, அதன் பாயை விரித்து விடு.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### தொழில் நுட்பத் திறமை

நிலமும் நீருமே யாழ்ப்பாண மக்களின் இன்றைய தேவை என்ற பல்லவி காணி அமைச்சர் காமினியின் யாழ்ப்பாண விஜயத்தில் பாடப்பட்டது. அந்த வைபவத்துக்கு அது பொருத்தமானது.

வழக்கம்போல் அமைச்சர் மகாவலியை விரைவில் இங்கு அழைப்பதாகச் சொல்லி காணி அபிவிருத்திக்கும் ஆவன செய்வதாக உறுதி கூறியிருக்கிறார். யாழ்ப்பாண விவசாயியின் கடின உழைப்பு அவருடைய பேச்சில் இடம்பெறத்தவறவில்லை. "ஆகட்டும் பார்க்கலாம்" என்று அமரர் காமராஜ் அடிக்கடி கூறிவந்தது போல் நாமும் நம்பிக்கை இழக்காது இருந்து பார்ப்போம்.

மூன்றும் உலகைச்சேர்ந்த நாம் ஏழை விவசாயிகளாக வாழ்வதே குறிக்கோள் என்று திருப்தியடைந்துவிடலாமா? எமது நாட்டில்; எமது குடாநாட்டில் ஏழைகள் ஏராளம்! அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒருசிறு துண்டுக்காணியும் வாய்க்கால் அல்லது குளநீரும் கொடுத்துவிட்டால் அவர்கள் முன்னேற்றம்அடைந்துவிடமுடியுமா? மண்வெட்டியும் சவளும், பிக்கானும், யந்திரக் கலப்பையும் தாமாக இயங்குவனவா? டரப்பும் பறையும் என்ற விளைச்சல்விகிதம் இன்றைய தேவைக்கு போதுமானதா?

ஏழைய விவசாயிக்கும் தொழில்நுட்பத் திறமை அவசியமென்பதே எமது தடைகளின் விடையாகும். இருபத்தொராம் நூற்றுண்டை எட்டிப்பார்க்கும் இன்றைய சிறுர்கள்தொழில் நுட்ப உலகை எவ்வாறு சமாளிக்கமுடியும்?

இலங்கை விவசாயிகளின் நாடு? உண்மை. இலங்கையின் வளம் கிராமங்களிலேயே தங்கியிருக்கிறது? உண்மை. கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் தேவைகளைச் சுயபூர்த்தி மூலம் பெற்றுத்தன்னிறைவு காண்பது அத்தியாவசியம். இதற்கு இன்றியமையாதது தொழில் நுட்பத்திறமை.

வேகமாக விருத்தியடைந்த நாடுகளை நாம் நோக்கில், அது யப்பானே அல்லது மேற்கு ஜேர்மனியோ, அமெரிக்காவோ, அல்லது நவசீனுவோ-சாதாரண உழைப்பாளியின் தொழில்நுட்பத் திறமையே அந்நாடுகளின் தீவிரமான வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ளது.

இந்த உண்மையை வற்புறுத்தியவர், யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்பப் பிரிவின் பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினர் அமெரிக்க அறிஞர் திரு. ஞெபேட் எல் டோய். செல்வம் கொழிக்கும் அமெரிக்காவிலேயே கலைப்பட்டதாரிகள் வேலையற்றிருப்பதை தமது குடும்ப அனுபவமாக வர்ணித்த நிதி நிபுணர், உற்பத்தியின்மூலமே நாடு முன்னேற முடியுமென்பதைத் திட்டமாக வலியுறுத்தியிருக்கிறார்.

எமது கலாசாரத்தின் அடிப்படை உண்மையே அப்பெரியாரின் அறிவுரையாகும். செய்யுந் தொழிலே தெய்வம்! அத்தொழில் திருந்தச் செய்யப்படவேண்டும். இம்மகாவாக்கியங்களை நாம் மறந்து பாடசாலைகளில் புத்தகங்களை நம்பி அவ்ற்றை மனனம் பண்ணி, அந்தப் பாடங்களை மற்றவர்களுக்கு தொற்று நோய்போல் பரப்பிவருவதே இன்றைய கலைப்பட்டதாரிப் படிப்பு.

பயன்தருங் கல்வி கற்பவனுக்கும், மற்றையோருக்கும் வாழ்க்கையின் அவசிய தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவவேண்டும். இயந்திர உலகில் வாழும்நாம், மாட்டுவண்டி வேகத்தில் எதனையும் சாதிக்கலாமென்று நினைப்பது மடைமை.

தொழில் நுட்பப் பயிற்சி எவருக்கும்அவசியம். அதன் உயர்தரப்பயிற்சி பலருக்கும் அத்தியாவசியம். அப்பயிற்சியே ஒருவனின் மூலதனம். அது உண்டானல் ஒருவன் காட்டிலோ, நாட்டிலோ, கடலிலோ, விண்ணிலோ வசதியாய் வாழமுடியும்.

தொழில் விசுவாசம் ஒரு தெய்வீகப்பண்பு என்பதே இன்று ஆரம்பமாகும் நவராத்திரிவிழா [illegible] நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

"பாடசாலைகளின் அபிவிருத்திக்கு

# ஒதுக்கிய நிதிகள் திரும்பியதால் அடுத்த ஆண்டில் கஷ்ட நிலை!"

## யாழ். மாவட்ட அமைச்சர் தகவல்

(புலோலி)

'பாடசாலைகளின் அபிவிருத்திகளுக்கெனப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதிகள் பாவிக்கப்படாமல் திரும்பவும் அரசாங்கத்தையே சென்றடைகின்றன. அதனல் அடுத்த வருடம் பாடசாலைகளின் அபிவிருத்திகளுக்கெனப்பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடுசெய்வதில் கிரமம் அடையவேண்டிய நிலைஏற்பட்டிருக்கின்றது.'

மேற்கண்டவாறு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிக்கு கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்த யாழ்.மாவட்ட அமைச்சர் திரு. யூ.பி.விஜயக்கோன் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் செல்வி ஆர். ஜே. மான் தலைமையில் இவ்வரவேற்பு விழா நடைபெற்றது. இங்கு வருகை தந்த மாவட்ட அமைச்சரைப் பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவரும் பருத்தித்துறை நகராளுமன்றத் தலைவருமான திரு. எம். வேலும்மயிலும் மாலைசூட்டி வரவேற்றர். மாவட்ட அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் சொன்னதாவது:

'பாடசாலைகளின் அபிவிருத்திநடவடிக்கைகளிலேயே மாணவர்களின் கல்வித்தரம் பெரிதும் தங்கியுள்ளது. வசதிகளற்ற குறைபாடுகளுடன் காணப்படும் ஒரு பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் பூரணத்துவமான கல்வியைப் பெறுவது முடியாமல் இருக்கும். எனவே மாணவர்கள் கல்வித்தரத்தில் பின்தங்கிய நிலைக்குள்ளாக வேண்டியேற்படுகின்றது. எனவே பாடசாலைகளின் அபிவிருத்தியில் பெற்றேர் கூடிய கவனம்செலுத்த வேண்டும்.

'பாடசாலைஅபிவிருத்திச்சங்கங்கள் பேற்றேர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெற்று அவற்றை வங்கிகளில் வைப்பிலிட்டு, அதன்மூலம் கிடைக்கும் வட்டியைக்கொண்டு பாடசாலைகளைப் பராமரிக்கவேண்டியநிலையும் உருவாகியுள்ளது. எனவே ஆசிரியர்களும் பெற்றேர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரும் ஒத்துழைத்து பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதுதான் எமது நாட்டில் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகள் உருவாகமுடியும். (அ)

## திருமலையில் நவராத்திரிவிழா

(திருகோணமலை)

பாடல்பெற்ற தலமான திருக்கோணேஸ்வரத்திலும், மற்றும் ஆலயங்களிலும் சமய நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் நவராத்திரி விழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக இந்துக்கல்லூரி சிவயோக சமாஜம் போன்றவற்றில் தொடர்ந்து பத்துநாட்களும் நவராத்திரி விழா நடைபெறவுள்ளது. இறுதிநாளான விஜயதசமியன்று எல்லா சைவ ஆலயங்களிலும் இருந்து அடியார்கள் கும்பம், காவடி எடுத்துநகரை வலம்வருவதை பார்க்க வெளியூர்களில் இருந்தும் மக்கள் வருவது ஒரு சிறப்பு அம்சமாகும். இலங்கையில் திருகோணமலையில் மட்டுமே இப்படியான கும்பக்காட்சியைக் காணமுடியும். (அ)

## விபத்து மரணம்

(மாவிட்டபுரம்)

அநாதைப் பணத்தைப்பெற்றுக்கொண்டு வீதியைக் கடக்க முற்பட்ட 75வயது மூதாட்டி ஒருவர் வீதியால் வந்த லொறியால் மோதுண்டு மரணமானர்.

உரும்பிராயைச் சேர்ந்த பி. இலட்சுமி என்னும் மூதாட்டியே இக்கதிக்குள்ளானவராவர்.

உரும்பிராய் தபால் நிலையத்தில் அநாதைகளுக்கான பணத்தை பெற்றுக்கொண்டு வீதியைக் கடக்க முயன்றபோது புன்னலைக்கட்டுவனிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற லொறி ஒன்றினல் இவர் மோதப்பட்டு உடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட போது அங்கு மரணமானர்.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தி விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

## மக்கள் கருத்து

### கண்ணபுரத்தின் அவல நிலை

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் நோயாளியான இடம் கண்ணபுரமென்ருல் மிகையாகாது. கண்ணபுரம் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாண (மா) நகரத்தின் வடமேற்கேயுள்ள ஒரு பகுதி இது. சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம் இத்தனையுமற்ற சேரியே கண்ணபுரம்.

சங்கிலி மன்னன் இராசராசன் தற்சமயம் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்திருந்தால் புராண இதிகாசத்தில் எழுதப்பெற்ற இயற்கைச் சுனையுடைய வில்லூன்றி கேணியையும், அதன் சுற்றுடலில் அமைந்துள்ள கண்ணபுர சேரியையும் புனருத்தாரணம் செய்திருப்பார். ஆனல் துரதிருஷ்டவசமாக அந்த இராசா இல்லாமையினுல், நவீன யுகத்திலுள்ள எந்த இராசாவும் தேர்தல் காலங்களைத் தவிர தேரேறி வந்தமை கிடையாது.

வண்ணை சிவன் கோவிலுக்கு உரித்தான பற்றைகள் நிறைந்த கண்ணபுரத்தை வதிவிடமற்ற பலர் கோவில் முகாமையாளரின் அனுமதியுடன் தங்கள் சொந்தச் செலவில் பற்றைகளை அகற்றி, மண்பறித்து, வீதி அமைத்து, மா நகரத்திலுள்ள குப்பை கூழங்களினுல் பள்ளங்களை நிரப்பி, கோடையில் வெப்பத்தினுலும், மாரியில் குளிரினுலும் தாக்குதலுக்குள்ளாகி வாழ்ந்துவருகின்ருர்கள். கோடையிலும், மாரியிலும் குளிர்தரு நிழல்போல் முன்னை நாள் மாநகர முதல்வர் அமரர் துரையப்பாவினுல் போடப்பட்ட ஒரேயொரு தண்ணீர்க் குழாயே அங்கு வாழும் குடிமக்களுக்கு பலன் தருகின்றது.

1977 பொதுத் தேர்தல் காலத்திலும், 1979 மாநகராட்சிமன்ற தேர்தல் காலங்களிலும் வீடு வீடாக, குப்பை மேடுகளை ஏறி நடந்து வந்து வாக்குப் பிச்சை கேட்டவர்கள் கண்ணபுரம் கண்ணுக்குள்ளே இருக்கிறது என்றுர்கள். குறிப்பாக மாநகராட்சிமன்ற தேர்தல் காலங்களில் புடைசூழ வந்தவர்கள், நாங்கள் பதவிக்கு வந்தால் மேல[illegible] இரண்டு [illegible] அமைப்போம், போ[illegible] வச [illegible] ஒழிப்போம், உங்களை மேல்நிலைப்படுத்துவோம் என்றவர்கள் கண்ணபுர சேரிவாழ் குடிமக்களுக்கு செய்த வேலைகள் இரண்டு. ஒன்று ரேட்டுப் பச்சம்மட்டும் தற்காலிக மின் இணைப்பு; இரண்டாவது; மாநகரசபையால் இலவசமாக பறிக்கப்பட்ட குப்பைகளை நிற்பாட்டியமை. இப்பகுதி மக்கள் யாழ். எம். பி. யோகேஸ்வரனை அழைப்பித்து பொதுக்கூட்டமொன்றைக் கூட்டி தங்கள் நிலைவரங்களைத் தெளிவுபடுத்தினுர்கள். தாங்கள் செய்யும் அபிவிருத்திக்கெல்லாம் அரசாங்கமும் சில வேளை முட்டுக்கட்டையாய் இருப்பதால், இது விடயத்தை தான் பிரதம மந்திரியுடன் கதைத்து ஆவன செய்வதாக உறுதி அளித்தார் எம்.பி. இதன் பயனே கண்ணபுர வீடமைப்புத் திட்டம். இந்த திட்டத்தில் 75 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. பதிவு செய்யப்பட்ட 47 குடியிருப்பாளர்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைக்கும் வேலைகள் இம்மாத இறுதிக்குள் சேணியடியில் அமைவுறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 75 வீடுகள் கட்டி முடிவுற்றதும் 47 குடியிருப்பாளர்களின் வீடற்ற உறவினர்களுக்கே மிகுதி வீடுகளைப் பகிர்ந்தளிப்பார் என்பது யாவரும் அறிந்த விடயம். ஆகையால், இது விடயத்தில் யோகேசுவின் முயற்சி வெற்றி பெறுவதும், கண்ணபுர சேரிவாழ் குடிமக்களின் அவல நிலை நீங்குவது பிள்ளையார் கதைபோல் அமையமாட்டாதென்றே நம்புகிறோம்.

கண்ணபுரம் சேரிவாழ்
**வேலன், நாகன், முருகன்.**

கண்ணபுரம்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

நீர்வேலி அத்தியார்

## இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா

(நீர்வேலி)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி,ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் திரு.எஸ். இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் கல்வி அதிகாரி திரு. க. நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.கே.எஸ். பொன்னுத்துரை ஸ்தாபகர் தின உரையை நிகழ்த்துவார். திருமதி க. நவரத்தினம் பரிசுகளை வழங்குவார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## "சட்டக்கலாநிதி பட்டம் வழங்குக"

(திருகோணமலை)

திருகோணமலையைச் சேர்ந்தவரும், முன்னுள் இலங்கை பெற்ருேலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும், சட்டத்துறையில் தனக்கென ஒருதனி இடத்தை வகித்துவருபவரும், பல சட்டம் சம்பந்தமான நூல்களை எழுதியவருமான திரு. ஈ.ஆர்.எஸ். ஆர். குமாரசுவாமி சட்டத்துறையில் ஆற்றிய சேவையை கெளரவித்து விசேட சட்டக்கலாநிதி பட்டம் வழங்கிக் கெளரவிக்கும்படி திருகோணமலை முற்போக்கு வாலிபசங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. [க]

## சக்தியே தெய்வமாகும்

இயற்கையே தெய்வமாகும்!
இதற் மேல் தெய்வமில்லை
செயற்கையே கோயிலாகும்
தெய்வத்தையங்கே காண்பர்
மயக்கமே கொண்டுநாளும்
மனத்தினிற் காணமாட்டார்
இயக்கமே சக்தியாகும்
இதனையே தெய்வமென்போம்.

— முருக. வே. பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூர் இளங்கோவடிகள் மன்றத்தின் சிலப்பதிகார மகாநாடு

## ★ சிறப்பு மலர் ★

## தமிழுக்குக் கிடைத்த ஒரு கலைச் செல்வம்

தமிழுலகுக்குக் கிடைத்த கலைச்செல்வமான ஐம்பெருங் காப்பியத்தில் ஒன்று சிலப்பதிகாரம். இந்தக் காவியத்தின் மூலம் எமக்குக் கிடைத்த காவிய நாயகி கண்ணகி வழிபாட்டுக்குரிய தெய்வமல்ல என்ற வாதம் இன்று நம் நாட்டில் தோன்றியிருப்பது கவலைக்குரியது தான்.

இந்நிலையில் சிலப்பதிகாரத்தின் மீது சகல கோணத்திலும் நம் அறிஞர்களின் பார்வையைச் செலுத்தி முழு அளவிலான ஆய்வொன்றை நடாத்த வேண்டுமென்ற நாம் முதலில் திட்டமிட்டிருந்தோம். அவ்வாறு முழு அளவில் நடாத்த எமக்கு சில சிக்கல்கள் ஏற்பட்ட போதிலும் ஒரளவுக்கு எமது எண்ணம் நிறைவேறும் என்றே கருதுகிறோம்.

எமது மாநாடு சிறக்க தமிழ் மக்கள் அனைவரும் குறிப்பாக காவலூர் மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நம்புகிறேன். மாநாடு சிறக்கவும் வாழ்த்துவதுடன் மாநாட்டையொட்டி 'ஈழநாடு' வெளியிடும் சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

—மு.சோமசுந்தரம்பி.எஸ்.சி

## தமிழக எழுத்தாளர் கோதண்டம் ஆசி

தமிழ்த்தாயின் சீரணியாதிய, சிலம்பின் பெருமையும் சுவையும் விளக்கும் நற்றிருண்டில் சிறப்புற்றிலங்கும் இளங்கோவடிகள் மன்றம் மலர் வெளியிட்டு விழா எடுத்து மகிழ்ந்தது கண்டு உளங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''மன்றம் சீரும் சிறப்புடன் இயங்கி தமிழ்த் தொண்டாற்ற எனது நல்வாழ்த்துக்கள்.

அன்பன்
கொ. மா. கோதண்டம்

## மூன்று நாள் விழா

சிலப்பதிகார மகாநாடு இன்று காவலூர், கரம்பனில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

தமிழறிஞர் வண. தனிநாயகம் அடிகள்அரங்கில் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும்மூன்றுநாள் சிலப்பதிகார விழாவில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

### முதல்நாள் நிகழ்ச்சிகள்

இன்று பிற்பகல் நான்கு மணிக்கு காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் கரம்பன் கண்ணகி அம்மன் கோவிலில் இருந்து தமிழ் அறிஞர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு, மாநாட்டு அரங்கை அடைவார்கள்.

மாலை ஆறுமணிக்கு திரு.த. சண்முகலிங்கம் ஜே.பி., மங்கள விளக்கேற்ற, திரு, அருணகிரி ஜே. பி. வரவேற்புரை நிகழ்த்த, காவலூர் எஸ். ஜெகநாதன் ஆரம்பவுரை ஆற்ற, பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையுரை நிகழ்த்துவார்.

சிறப்புரைகளாக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் திரு. மா. கோதண்டம் 'சிலம்பு தரும் செய்தி' எனும் பொருள் பற்றியும், பன்மொழிப்புலவர் மு. கு. ஜகன்னாதராஜா 'சிலம்பும் மேகலையும்' என்னும் பொருள்பற்றியும்,யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் 'சூழ்வினை சிலம்பு காரணமாக' என்னும்பொருள் குறித்தும், யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர் திரு.ஆ. சிவநேசச்செல்வன் 'சிலப்பதிகாரச் சமுதாயம்' பற்றியும், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் 'தமிழ்ப் பெண்களுக்கு சிலம்பு தந்தது' எனும்பொருள் பற்றியும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த திரு. நா. சுப்பிரமணிய ஐயர் 'இளங்கோ கையாண்ட செய்யுள் வடிவங்கள்' பற்றியும் உரை நிகழ்த்துவார்கள்.

திரு. பொன். சோமசுந்தரம் நன்றியுரை கூறுவார்.

இதனைத்தொடர்ந்து 'மாருதம்' மலர் வெளியிடப்படும்.

திரு. கணபதி கணேசன் 'மாருதம்' மலரை வெளியிட்டு உரைநிகழ்த்த, திரு. கே. பாக்கியநாதன் ஆய்வுரையாற்ற, தென் கரம்பனூரான் பதிலுரை கூறுவார்.

கலை நிகழ்ச்சியாக தொலைக் காட்சியில் திரைப்படம் இடம் பெறும்.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

தலைவர்: மு. சோமசுந்தரம் [விழாக்குழுத்தலைவர்], மங்கள விளக்கேற்றல்: திரு. இ மாணிக்கம், வரவேற்புரை: க. தர்மகுணசிங்கம், தலைமையுரை திரு. மு. சோமசுந்தரம்) விழாக்குழுத் தலைவர்), சிறப்புரைகள்: பன்மொழிப்புலவர் மு. கு. ஜகன்னாதராஜா, திரு. க. சொக்கலிங்கம், திரு.எம்.ஏ. நுஃமான், திரு. தி. நடராசா, சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன்,

#### கவியரங்கு

தலைவர்: 'பல்கலை வேந்தன்' சில்லையூர் செல்வராஜன், கவிஞர்கள்: அகளங்கன், காவலூர் ஜெகநாதன், அனலை ஆறு. இராசேந்திரம், எஸ். சி. எஸ். சிதம்பரநாதன், மாத்தளை வடிவேலன், கொ. மா. கோதண்டம்.

#### கலைநிகழ்ச்சி

சில்லையூர் செல்வராஜன், கமலினி செல்வராஜன் வழங்கும் கலைக்கதம்பம்.

---

**சிலப்பதிகார மாநாடு**

**காவலூர் கரம்பனில்**

தமிழறிஞர்
**வண. தனிநாயகம் அடிகள் அரங்கில்**
**1980**
**அக்டோபர் 10, 11, 12-ம் திகதிகளில்**

ஈழத்தின்
**தலைசிறந்த தமிழ் அறிஞர்களுடன் இந்திய அறிஞர்கள் சிலர் கலந்து சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.**

தவறுது மாநாட்டில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு. சோமசுந்தரம்
(விழாக்குழுத் தலைவர்)

எஸ். குகநாதன்,
பொன். சோமசுந்தரம்,
(இணைச்செயலாளர்கள்)

**காவலூர் இளங்கோவடிகள் மன்றம்**
ஊர்காவற்றுறை.

---

[மாநாட்டில் கலந்துகொள்ளும் இராஜபாளையம் மணிமேகலை மன்றத் தலைவர் பன்மொழிப் புலவரின் வாழ்த்துப்பா!]

பத்தினிக் கடவுட் காகப்
படிமம் எடுத்த தாலே
நித்தியப் புகழைப் பெற்ற
நீதிசால் கயவா குமன்னன்
வித்திய சிலம்பின் பெருமை
விதைகளில் ஒன்றே இன்று
மெத்தநற் புகழோ டோங்கும்
மிகுநல இளங்கோ மன்றம்
ஃ ஃ ஃ
இலங்கையில் வாழும் மக்கள்
இளங்கோவின் புனிதச் செய்தி
கலங்குறு வகையில் தெரியக்
கண்டநல் மன்றம் இஃது
நலம்பெறத் தழைத்துத் தமிழின்
நன்னயம் மலரச் செய்யும்
மலரினைத் தருத லாலே
மணம்பெறத் தென்றல் வீசும்!
ஃ ஃ ஃ
சீருறும் இளங்கோ மன்றம்
சிலப்பதி காரச் சுவையை
ஆரவே பருகத் தந்தே
அமுதினை அளித்த லாலே
தாரகை மீதி வர்ந்தே
தனித்துல காளும் இன்பம்
பாருளோர் எல்லாம் பெற்ற
பயனடைந் திடுவோ மன்றே.

---

**சிலப்பதிகார மகாநாடு**
**சிறப்புற**
**வாழ்த்துகின்றோம்!**

**கே. கே. வி.**
**யாழ்ப்பாணம் நகைமாளிகை,**
82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 362.

★ ★

**எஸ். சின்னத்துரை அன் கொம்பனி,**
25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7357.

★ ★

**துரை**
66, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 7750 — 7786.

★ ★

**நியூரோன் எலெக்றிக்கல்ஸ்,**
141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7016

★ ★

**புறே மோட்டர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி லிமிட்டெட்**
844, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொலைபேசி: 8006

★ ★

**கல்யாணி கிறீம் ஹவுஸ்,**
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8077.

★ ★

**நியூவிக்ரேஸ்,**
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7804.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார வேலைகளில் தாமதம் ஏன்? யாழ். மேயர் விளக்கம்

## 'குடிநீர்ப் பிரச்னைக்கும் தீர்வு'

(நமது அலுவலக நிருபர்)

(யாழ்ப்பாணம்)
அத்தியாவசிய மின்பொருட்களின் தட்டுப்பாட்டின் காரணத்தினாலும் அப்பொருட்கள் கிடைக்காத படியாலும், மின்சார வேலைகளினால் தாமதம் ஏற்பட்டு வருகிறது. மின்பொருட்களை விரைவில் பெறுவதற்கு சகல முயற்சியும்எடுத்து வருகிறேன்''

யாழ். நகரமுதல்வர் திரு. இராசா விசுவநாதன் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நகரமுதல்வர் திரு. இராசா விசுவநாதன் மேலும் கூறியதாவது:- மின் பொருட்கள் இல்லாத போதிலும், மின்சாரப்பகுதியினர் பெரும் சிரமத்தின் மத்தியில் மக்களின் தேவைகள் பூர்த்திசெய்து வருகின்றனர்.

''நகரவீதிகள் ஒவ்வொன்றுக திருத்தவேலைகள் நடைபெற்றுவருகின்றன். ரோலர்கள் இல்லாததினால் தொடர்ந்து இந்த வீதி வீதிவேலைகளைச் செய்ய முடியாமலிருக்கிறது. இந்த நிலையிலும் பொது மக்களுக்காக வீதி வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

### குடிநீர்ப்பிரச்னை

''மக்களின் குடிநீர்ப் பிரச்னையை தீர்க்க பௌசர்கள் வாங்கப்பட்டுள்ளன. குழாய்கள் இல்லாத இடங்களில் பௌசர்மூலம் குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

### சுத்தமாக வைத்திருக்க

குப்பைகளை அகற்றுவதற்கு டிராக்டர்களும் வாங்கப்பட்டிருக்கின்றன. தற்போது வீதிகளில் உள்ள குப்பைகள் தினமும் டிராக்டர் மூலம் அகற்றப்பட்டுவருகின்றனநகரத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு பொதுமக்களும் கூடியளவு ஒத்துழைப்புத் தர முன்வர வேண்டும்.

''வீதியோரங்களில் மரங்களைச்சுற்றி கட்டப்பட்ட சுவர்கள் சில இடங்களில் இடிந்துள்ளன. இவற்றை மீண்டும்கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.

''மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு சகல நடவடிக்கைகளும்எடுக்கப்பட்டுவருகின்றன.

''தட்டுப்பாடு காரணமாகவே வரியிறுப்பாளர்களின் அபிலாசைகளைநிவர்த்திசெய்ய முடியாமலிருப்பதாகவும், விரைவில் இக்குறைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்'' (க)

## காவலூரில் இன்று சிலப்பதிகார மகாநாடு

(யாழ்ப்பாணம்)
காவலூர் இளங்கோவடிகள் மன்றத்தின் முதலாவது சிலப்பதிகார மாநாடு தென்கரம்பனில் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது, தமிழகத்திலிருந்து ராஜபாளயம் மணிமேகலை மன்றத் தலைவர் புன்மொழிப் புலவர் மு. கு. ஜகன்னாதராஜா, எழுத்தாளர் கொ. மா. கோதண்டம் ஆகியோரும் இதில் கலந்து கொள்கின்றனர்.

தமிழ்நாடு சபாநாயகர் திரு. ராஜாராமும் இவ்விழாவில் கலந்து கொள்கிறார்.

நாளைய நிகழ்ச்சிகளுக்கு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமைவகிப்பார். கலாநிதி அ. சண்முகதாஸ், ஆ. சிவநேசச் செல்வன், நா. சுப்பிரமணிய ஐயர், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவர். சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படும். (கு)

## 'தர்மர்' நாடு திரும்பினார்

(கொழும்பு)
பல்கேரிய தலைநகரான சோபியாவில் நடைபெற்ற உலக சமாதானத்திற்கான மக்கள் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்ட மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் நாடு திரும்பினார்.

திரு. ரி. பி. சுபசிங்கா, திரு. எஸ். நடேசன் கியூ. சி., திருமதி விவியன் குணவர்த்தன ஆகியோரும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டு நாடு திரும்பினார்கள். (ம-இ)

## பிணைமனு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
பொலிஸ் சார்ஜன்ட் அன்ரன் கொலைவழக்கின் எதிரிகளான இராணுவ வீரர்கள் ஹெட்டியாராச்சி, உப்புல் ஆகிய இருவரையும் பிணையில் விடுமாறு யாழ். மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுமீதான விசாரணை நேற்று எடுக்கப்பட்டும் இம்மாதம் 29ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

### ராஜன்மனு

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கொலைவழக்கின் முதலாவது எதிரியான ராஜன் அல்லது வீரப்பனை பிணையில் விடுமாறு கோரித்தாக்கல் செய்த மனுவிசாரணையும் இம்மாதம் 29ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ)

## ''உழைக்கும் மக்களின் போராட்டம் மூலமே இனப் பிரச்னைக்கு தீர்வுகாணலாம்''

(யாழ்ப்பாணம்)
'இனப்பிரச்னையை அடிப்படையாகக்கொண்ட சில கட்சிகள் இன்றும் எம் மத்தியில் இருக்கின்றன. அக்கட்சிகள் தமது சொந்த நலன்கருதி மேலும் பல சிகல்களையும்உண்டாக்கி வருகின்றன. உழைக்கும் மக்களின் போராட்டங்களின் மூலமே குறுகிய நோக்கங்கொண்ட அக்கட்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் இனப் பிரச்னைக்கும் சிறந்த ஒரு தீர்வும் காணமுடியும்.'

யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் வடபிரதேச மகாநாட்டில் சிறப்புரை நிகழ்த்திய உழைக்கும் மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.எச். எல். கே. கரவிட்ட மேற்கண்டவாறு கூறினார்.

ஐவர் தலைமைக் குழு தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. கரவிட்ட தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

'இன்று நமது நாட்டில் மேற்கத்திய நாடுகளின் எண்ணப்படியே ஆட்சியினர் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றனர். இதனால்தான் விலைவாசி உயர்வும், வேலையின்மையும் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப் பட்டுள்ளது.

'ஐ. தே. கட்சி ஆட்சிப் பதவிக்கு வந்த மூன்று வருடங்களில் உலக வங்கி, சர்வதேச நாணயசபை மற்றும் மேற்கத்திய நாடுகள், யப்பான் போன்றவற்றிடமிருந்து பெருந்தொகையான கடன்களைப் பெற்றுள்ளது. அவர்களது கடன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக ரூபாவன் மதிப்புக் குறைக்கப்பட்டது. தாராள இறக்குமதி அனுமதி வழங்கப்பட்டது. அவர்களது இறக்குமதிப் பொருட்களுக்குக் கூடிய விலையும் நமது ஏற்றுமதிப்பொருட்களுக்குக் குறைந்த விலையும் வகுக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்தி நாசமாக்கப்பட்டது. விலைவாசி உயர்வும், வேலையின்மையும் உழைக்கும் மக்களை வாட்டி வதைக்கின்றன. ஆட்சியினரோ அபிவிருத்தி என்று கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். இதற்கு முடிவு காண புரட்சிகர, முற்போக்கு, ஜனநாயக தேசபக்த சக்திகள் முயற்சிசெய்யவேண்டும்.'

'இன்றைய நிலையில் இனப்பிரச்னை ஒன்று இல்லை என்று கூறுவதோ அல்லது அதை மிகைப்படுத்திக் கோஷங்களை முன்வைப்பதோ ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல. இனப்பிரச்னை என்ற பிராணவாயு மூலமாகச் சில பாராளுமன்றக் கட்சிகள் உயிர்வாழ முற்படுகின்றன.'

இலங்கைக் கம்யூனிஸ்ட் (இடது) கட்சி சார்பில் திரு. செந்திவேல்பேசினார். இக்கட்சி சார்பில் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் கட்சியின் வாழ்த்துரை சமர்ப்பித்தார்.

நாள் முழுதும் நடைபெற்ற இம்மகாநாட்டில் இதர மாகாணங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். 35 பேர்கொண்ட பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்கள் மாநாட்டில் தெரிவு செய்யப் பட்டனர். (கொ-ச)

## பண்ணையில் நவராத்திரி

(யாழ்ப்பாணம்)
யாழ். சைவ மகளிர் மன்றம் இன்று வெள்ளிக்கிழமை 2-30 மணியளவில் பண்ணையிலுள்ள சிறுவர் கருணை இல்லத்தில் நவராத்திரிவிழாவைக் கொண்டாடுகிறார்கள். இவ்விழா சிறுவர் கருணை இல்லத் தலைவர் சகோதரர் பாலகிருஷ்ணனின் தலைமையில் நடைபெறும். செல்வி தமயந்தி பரம் தில்லைராஜாவின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் மற்றும் மன்ற அங்கத்தினரின் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். மேலும் சைவ மகளிர் மன்றம் கடந்த 5-ம் திகதியன்று நடாத்திய கோலப் போட்டி, மாலை கட்டும்போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களுக்கு கருணை இல்லத் தலைவர் பரிசில்களை வழங்குவார்.

## ''யாழ். மாவட்டத்தின் 11 தொகுதிகளிலும் மாதிரிக் கிராமங்கள் கன்பொல்லைச் சிக்கல்கள் இங்கும் ஏற்படக்கூடாது''

— 'அமிர்'

(மாவிட்டபுரம்)
''உடுப்பிட்டியில் நிறுவப்பட்டு வரும் கன்பொல்லை மாதிரிக் கிராமம் போன்று இன்று யாழ் மாவட்டத்தின் 11 தொகுதிளிலும் மாதிரிக்கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன. ஆனால் கன்பொல்லையில் ஏற்பட்டது போன்று சிக்கல்கள், தடைகள் இங்கு ஏற்பட்டு விடக்கூடாது. மக்கள் ஒற்றுமையாக நின்று இத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முன்வர வேண்டும்.''

இவ்வாறு கீரிமலையையடுத்த வசந்தபுரம் கிராமத்தில் காங்கேசன்துறைத் தொகுதிக்கான மாதிரிக் கிராமத்தை அடிக்கல் நாட்டி வேலைகளை ஆரம்பித்து வைத்துப்பேசிய எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:- ...ஒரேயொரு மாதிரிக் கிராமத்தை அமைக்கவே முன்னர் அரசாங்கம் முன்வந்தது. அச்சமயம் எமது உடுப்பிட்டிப் பிரதிநிதி மூலமாக மிகவும் பின்தங்கிய மக்களுக்கு உதவுவதற்காக கன்பொலை கிராமத்தை மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது அங்கு பல சிக்கல்கள், தடைகள் தோன்றின. அதனால் எப்போதோ முடிய வேண்டிய வேலைகள் இன்னும் முடியாமல் இப்பொழுதுதான் முதற்கட்ட வேலைகள் முடிவடைந்துள்ளன,

''இதுபோன்ற மாதிரிக் கிராமங்கள் இப்போது யாழ் மாவட்டத்தில் பலதொகுதிகளிலும்அமைக்கப்படஉள்ளன. காங்கேசன்துறைத் தொகுதியில் வசந்தபுரத்தை மாதிரிக் கிராமமாக நான் சிபார்சு செய்துள்ளேன். இங்கு 81 வீடுகளுடன் சனசமூகநிலையம் மக்கள் கடை, பொது நிலையம், விளையாட்டு மைதானம் என்பன அமைய இருக்கின்றன, திட்டங்கள் போட்டால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாக நிறைவேற்ற மக்கள் ஒத்துழைக்கவேண்டும், இப்படியான திட்டங்கள் பின்தங்கிய மக்களுக்கு பெரிதும் நன்மைபயப்பனவாக உள்ளன.

''அரசாங்கத்திற்கு இன்று

(2-ம் பக்கம் பார்க்க)

## சாவ. தொகுதியில் 4 கிராமங்கள்

(மட்டுவில்)
சாவகச்சேரித் தொகுதியில் நான்கு மாதிரிக் கிராமங்களை நிறுவுவதற்கான முயற்சிகளை தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா மேற்கொண்டுள்ளார்.

கைதடி எருதிடல் நவபுரம் மாதிரிக் கிராமமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து எழுதுமட்டுவாள் 'இராமியன்கா', உசன் 'தென்பி', உசன் 'வேதக்கால்' ஆகிய மூன்று கிராமங்களும் 1983-ம் ஆண்டிற்கிடையில் மாதிரிக் கிராமமாக்கும் முயற்சியில் உதவி அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார். (அ)

## 2 ஆண்டுகள் தேடப்பட்டவர் சுன்னாகத்தில் கைது!

(யாழ்ப்பாணம்)
78-ம் ஆண்டு முதல் பொலிசாரினால் தேடப்பட்டுவந்த ஐ.ஆர்.சி. ஒருவரை யாழ். பொலிசார் சுன்னாகத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வசிக்கும் கனகசபை என்பவர் வீட்டில் நல்லூர் திருவிழாவின் போது 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் திருட்டுப்போனது தொடர்பாக விசாரணைசெய்த பொலிசார் திருட்டுப்போன வீட்டில் காணப்பட்ட கையடையாளங்களைப் பதிவுசெய்து கொழும்புக்கு அனுப்பியதை அடுத்து திருடியவர் செல்லத்துரை என்ற ஐ. ஆர். சி. என்று கண்டு பிடித்ததைத் தொடர்ந்து அந்நபரை பொலிசார் சுன்னாகத்தில் வைத்துக் கைது செய்தனர்.

4 கோயில்களில் தாம் ஏற்கனவே திருடியதாகவும் 3பவுண் நகைகள் பருத்தித்துறையில் இருக்கும் ஒருவரிடம் விற்றதாகவும் அந்நபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்தார்.

நகை மீட்கப்பட்டதுடன் திருட்டுப்பணம் எனக்கருதப் படும் பணம் [illegible]ருந்து மீட்கப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.

**ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்**

மற்றும் பலர் நடித்த

**வண்டிக்காரன் மகன்**

(ஈஸ்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642

தினசரி 4 காட்சிகள்

100–வது வெற்றித் திருநாளை நோக்கி......

**நீயா?** "வெள்ளி விழா" வண்ணச்சித்திரம்

Next Attraction : "THE DIRTY DOZEN"

எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராணி** - யாழ்ப்பாணம்

காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45

கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா

**சட்டம் என் கையில்**

(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**வெலிங்டன்** (யாழ்நகர்)

தினசரி 3 காட்சிகள்

சனி-ஞாயிறு 4 காட்சிகள்

**கடன் வாங்கி கல்யாணம்**

**லிடோ** (யாழ்நகர்)

Daily at: 10-30 m, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm

RIVER OF THE GREAT CAYMAN

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)

தினசரி; 10-30, 1-30, 4-30, 7-00

சிவகுமார் — ஜெய்சித்திரா – ஜெயசுதா நடித்த

**வெள்ளிக்கிழமை விரதம்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

PETER USTINV, DAVID NIVEN, MIAFARROW

in

**DEAD ON THE NI E**

Color

எதிர்பாருங்கள்

ஒரேவானம் ஒரேபூமி


## ஓய்வு பெற்றார்



"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கீந்தென்றவன் மைந்தர் தம்ஈகைமறுப்பரோ" என்ற ஆன்றோர் வாக்கிற்கமைய அமரர் முதலியார் அத்தியார் அருணாசலத்தின் அரும்பெரும் சேவையைப் பெரிதும் மதித்து அவருக்குப்பின் அவர் பணியைத் தொடர்ந்து செய்து வந்தவர் அன்னாரது புதல்வரான திரு. அ. அ. பாலசுப்பிரமணியம் (பாலா மாஸ்ரர்). அவர் தந்தையின் அயரா முயற்சியினால் உருவான "அத்தியார் இந்துக் கல்லூரியில்" 34 வருட காலமாக ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். அன்னாரும் குடும்பத்தினரும் செய்த சேவையை மதித்து நன்றி கூறவேண்டிய நிலையில் நீர்வையூர் மக்கள் இருக்கின்றனர் என்றால் அது மிகையாகாது.

திரு. அ. அ. பாலசுப்பிரமணியம் (பாலாமாஸ்ரர்) தந்தையார் ஸ்தாபித்த அத்தியார் இந்துக் கல்லூரியிலே தமது ஆரம்பக் கல்வியை கற்றபின் உயர்கல்வியை கொழும்பு புனிதயோசேப்புக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்று, 1944ம் ஆண்டுதொடக்கம் அத்தியார் இந்துக் கல்லூரியிலே ஆங்கில ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார், அக்காலத்திலிருந்து கல்வி கற்பிக்கும் கடமையுடன் நின்றுவிடாது, கல்லூரியின் வளர்ச்சிக்கு எந்தெந்த வகையில் பணிபுரிய வேண்டுமென அந்தந்த வகையில் பணிபுரிந்து தந்தையின் உயிரான கல்லூரியின் முன்னேற்றத்திற்குக் கண்ணாய் இருக்கும் மைந்தனாக விளங்கிவந்துள்ளார்.

தமது சொத்துக்களில் பெரும்பகுதியையும் கல்விக்கூடத்தை . அமைப்பதிலே செலவிட்டவர். இவர் தந்தை அக்காலப் பெறுமதியான சுமார் 5 லட்சம் ரூபா செலவில் உருவான இக் கல்லூரிக்கு அவர் கடன்பட்டும் செலவு செய்துள்ளார். அரசாங்கம் கல்லூரியைப்பொறுப்பேற்ற காலத்தில் எவ்வித நட்ட ஈட்டையும் பெறாத நிலையில் அக்கடனில் எஞ்சியிருந்த ஒரு பகுதியை மைந்தன் திரு.பாலசுப்பிரமணியம் தீர்க்க வேண்டியிருந்ததை பலர் அறியாதிருக்கலாம். அத்தகைய சேவைமனப்பான்மையை கொண்ட திரு.அ.அ. பாலசுப்பிரமணியம் அவர்களைப் பொது மக்கள் கல்லூரிப் போஷகராக அமர்த்தியதில் வியப்பில்லை.

இத்தகைய சேவையை ஆற்றித் தமது 60ம் ஆண்டு பூர்த்தியாகின்ற வேளை சேவையிலிருந்தும் இளைப்பாறும் பாலா மாஸ்டரின் சேவை பல்லாண்டு தொடரப் பிரார்த்திப்போம்.

-பழையமாணவன்

# ஜீவனாம்சப்பணம் கட்டத் தவறியவர் சிறையில்!

[ஊர்காவற்றுறை]

தனது மனைவிக்குச் செலுத்த வேண்டிய பதினெட்டரை மாதகால ஜீவனாம்சப் பணத்தைச் செலுத்தத் தவறிய இளைஞர் ஒருவருக்கு பதினெட்டரை மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது!

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த கந்தையா இராசலிங்கம் என்ற இளைஞர் தமக்கு கடந்த பதினெட்டரை மாதகாலமாக ஜீவனாம்சப் பணம் செலுத்தவில்லை என்று அவரது மனைவி அன்னம்மா சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பேரிலேயே இத்தண்டனையை ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் வழங்கினார்.

நீண்டகாலமாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் பிடிவிறாந்தில் கைது செய்யப்பட்ட இந்நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டாராயினும் பிணை செலுத்தாமையால் கடந்த இரண்டு மாதகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். தன்னால் ஜீவனாம்சப் பணம் செலுத்த முடியாமல் இருப்பதால் சிறைக்குச் செல்லத் தாம் விரும்புவதாக அவர் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்தே இத்தண்டனை வழங்கப்பட்டது.

தன்னைவிட இவருக்கு வேறு மூன்று மனைவிகள் இருப்பதாகவும், தனது ஐந்துபவுண் நிறையுள்ள பதக்கம் சங்கிலியைத் தந்தால் தான் ஜீவனாம்சம் கோராமல் விவாகரத்திற்கு இணங்குவதாகவும் விண்ணப்பதாரரான அன்னம்மா நீதிமன்றத்தில் தெரிவித்தார். ஆயினும் எதிர்வாதியான இராசலிங்கம் இதை முற்றாக மறுத்ததோடு, தான் சிறை செல்ல விரும்புவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி அவருக்கு பதினெட்டரை மாதகால சிறைத் தண்டனையை விதித்தார்.

## குன்றக்குடி அடிகள் திருமலை வருவார்

(திருகோணமலை)

தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தலைவரும், அருள்நெறித் தந்தையுமான தவத்திரு குன்றக்குடி அடிகளார் அடுத்த வருடம் மார்ச் மாதம் திருகோணமலை இளைஞர் அருள் நெறி மன்றத்தால் நடாத்த இருக்கும் சைவத்திருமுறை விழாவிலும், மன்றத்தின் இருபத்தாறாவது ஆண்டுவிழாவிலும் கலந்து கொண்டு பல சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்காக திருகோணமலைக்கு வருகின்றார். (அ)

## கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி முதலிடம்

(அரியாலை)

யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சங்கீத, நடனம் போட்டியில் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி மேற்பிரிவுக்கான நடனப் போட்டியில் குழு நடனத்திலும், மத்திய பிரிவுக்கான சங்கீத புதிய ஆக்கப்போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (ஈ)

## தீவிர பொலிஸ் பந்தோபஸ்து

மாவிட்டபுரம்

பெண்கடத்தல் சம்பவமொன்றின் எதிரொலியாக மயிலிட்டிப் பகுதியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் இப்பகுதியில் காங்கேசன்துறைப் பொலிசார் தீவிர பந்தோபஸ்து நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் பரீட்சையில் எழுதுவதற்காக பாடசாலைக்குச் சென்றபோது அவரைக் கடத்த சிலர் முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் கடந்த சில தினங்களின் முன் மயிலிட்டியில் இடம்பெற்றிருந்தது.

இது தொடர்பாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருந்த சந்தேக ஒருவரது வீட்டை தீயிட்டு கொழுத்த சிலர் முயன்றதாக மற்றொரு புகார் தற்போது காங்கேசன்துறைப் பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது. - (கு)

## வலி. கிழக்கில் தென்னம்பிள்ளை உற்பத்தி அதிகரிப்பு

(அரியாலை[

வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெரும் தொகையான தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்யுமுகமாக உதவி அரசாங்க அதிபர் அப்பகுதி மக்களுக்கு தென்னங்கன்றுகளை விலைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

கோப்பாய்த் தொகுதி மக்களுக்கு தென்னங்கன்று வழங்குவதற்காக கோப்பாய்த்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை வழங்கவிருக்கும் நன்கொடையைக் கொண்டு வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கால் நடையை அபிவிருத்தி செய்யவேண்டிய நடவடிக்கைகளை கோப்பாய் தென்கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் செய்துவருகிறது. (ஈ)


**ஸ்ரீதர்** - யாழ்நகர்

தினசரி 10-30,, 2-30 6-30 & 9-45.

பலகால இடைவெளியின்பின் மக்கள் திலகத்தின் புதுப் படத்தினைக் காணும் சந்தர்ப்பம்!

புரட்சி நடிகர் தமிழக முதல்வர் **எம்.ஜி.ஆர்.**

புரட்சிக் கன்னி **லதா**

வில்லனுக்கோர் சக்கரவர்த்தி **நம்பியார்**

நாகேஷ், தேங்காய், நிர்மலா, கண்ணன் வி. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்த



**மீனவ நண்பன்**

**வெஸ்லி** (மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30

நாகேஷ் - சௌகார் ஜானகி

**ஆலயம்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-30, 930

சனி, ஞாயிறு 2-15

ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி

ஆறிலிருந்து அறுபதுவரை

**ஹரன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி-தேவிகா

**அன்னை இல்லம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில்....
சைவ உணவிற்கும்
சுவையான
சிற்றுண்டிக்கும்
அன்பான உபசரிப்புக்கும்
ஏற்ற சைவ ஓட்டல்
**அசோக் பவான்**
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8095
கொழும்பு — யாழ்ப்பாண
பயண சேவையுண்டு

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

விஜயதசமியில்
படிப்பைத் தொடங்க
பாலர்கள் விரும்புவது
**வண்ணத்தமிழ்**
**அரிச்சுவடி**
அழகான வண்ணப்படங்களுடன்
விலை ரூபா 2-
**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## காசி வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)
திரு. காசி ஆனந்தன் மற்றும் 11பேர் மீது அரசுக்கு எதிராக துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் எடுக்கப்பட்டும் நவம்பர் மாதம் 29ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

புங்குடுதீவு கொலை, கொள்ளை வழக்கு:

# எதிரிகளின் கோரிக்கைமீது வீட்டைக் காட்டிக்கொடுத்தேன்"

## சலவைத் தொழிலாளி தொடர்ந்து சாட்சியம்

[ஊர்காவற்றுறை]
"இவ்வழக்கின் முதலாம் எதிரியான சோமசுந்தரம் சுப்பிரமணியமும் 4-ம் எதிரியான கிருஷ்ணபிள்ளை பரமலிங்கமும் என்னைக் கேட்டுக்கொண்டதனுல் நான் காலம் சென்ற சின்னத்துரை அன்னம்மா என்பவரது வீட்டைக் காட்டிக் கொடுத்தேன். ஆனுல் நான் அப்படிச் செய்ததன் மூலம் அந்தவீடு கொள்ளையடிக்கப்படுவதற்கும் அன்னம்மா கொலை செய்யப்படுவதற்கும் எந்தவித உதவியும் செய்யவில்லை"

இவ்வாறு புங்குடுதீவு-இறுப்பிட்டி அன்னம்மா கொலை, கொள்ளை வழக்கில் தொடர்ந்து மூன்ருவது தினமாக சாட்சியமளித்த புங்குடுதீவு இறுப்பிட்டியைச் சேர்ந்த சலவைத் தொழிலாளியான கந்தசாமி வசந்தன் (வயது 19) தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை நீதவான் திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் நடைபெற்று வரும் இவ்வழக்கில் கடந்த ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி புங்குடுதீவு இறுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை அன்னம்மா என்பவரைக் கொலை செய்தது காலம் சென்றவருக்கு சொந்தமான சில பொருட்களைக் கொள்ளையடித்தது ஆகிய குற்றச்சாட்டுகள் புங்குடுதீவைச் சேர்ந்த சோமசுந்தரம் சுப்பிரமணியம், நல்லையா ஆனந்தன் தம்பாப்பிள்ளை குணசிங்கம் கிருஷ்ணபிள்ளை பரமலிங்கம் ஆகிய நால்வர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. நேற்றைய விசாரணையில் கந்தசாமி வசந்தன் 1-ம் 4-ம் எதிரிகளின் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவினுல் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சட்: கிளிநொச்சியில் வைத்து காலம் சென்ற அன்னம்மாவின் வீட்டைப் பற்றிய தகவல்களை நீர் 4-ம் எதிரிக்கு கொடுத்தீர்? - அவர் கேட்டபடியால் நான் கூறினேன்.

சட்: என்ன தகவல்களைக் கூறினீர்? - தட்டிவீடா சுவர் வீடா என்று கேட்டார். அன்னம்மா நகைகள் அணிபவரா? என்று கேட்டார் ஆம் என்று கூறினேன். பூட்டுக்காப்பு அணிபவர் என்றும் கூறினேன்.

சட்: அன்னம்மாவின் வீட்டில் கொள்ளையடிக்கப்படவிருப்பது உமக்கு கிளிநொச்சியிலேயே தெரியும்? - ஆம்.

சட்: அடுத்தநாள் 4-ம் எதிரியுடன் புங்குடுதீவிற்கு வந்தீர்? - ஆம்.

சட்: 4-ம் எதிரியுடன் புங்குடுதீவிற்கு வந்தது அன்னம்மா வீட்டைக் காட்டிக் கொடுப்பதற்காகவா? - ஆம்.

சட்: புங்குடுதீவில் எங்கு இறங்கினீர்? -கழுதைப்பிட்டித் தொங்கலில்.

சட்; அங்கிருந்து எங்கு சென்றீர்கள்? - அன்னம்மா வீட்டுப்பாதையால் எனது வீட்டிற்குப் போனேம்.

சட்- அன்னம்மா வீட்டை 4-ம் எதிரிக்குக் காட்டிக் கொடுத்தீரா? - அவர்கேட்டுக் கொண்டபடியால் காட்டிக் கொடுத்தேன்.

சட்:வழக்கமாக அன்னம்மா வீட்டுப்பாதையால் தான் உமது வீட்டிற்குப் போவீரா? -இல்லை சந்தியில் இறங்கி வயல் வெளிக்கு ஊடாகப் போவேன்.

சட்: ஆகவே அன்னம்மா வீட்டில் நடைபெறவிருந்த கொலை கொள்ளைக்கு நீர் உதவியாக இருந்தீர்? - இல்லை அவர்கள் கேட்டதால் காட்டிக்கொடுத்தேன்.

சட்:- அன்னம்மாவின் வீட்டை 4ம் எதிரிக்கு காட்டிக் கொடுத்தது பற்றி உமது வீட்டிலுள்ளவர்களுக்கு ஏதும் கூறிவீரா? - இல்லை.

சட்:- அன்னம்மா வீட்டிற்கு நீர்தான் சலவை செய்வது? - ஆம்.

சட்? அன்னம்மா வீட்டில் கொள்ளை நடைபெற்றதாக கேள்விப்பட்டவுடன் என்ன செய்தீர்? - அன்னம்மா வீட்டிற்குப்புறப்பட்டுப்போனேன்.

சட்;- அங்கு எதைக் கண்டீர்? - அன்னம்மாவின் பிரேதம் இருந்தது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறதுஇவ்வழக்கில்1ம் 4ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா சட்டத்தரணி பி. கைலாசநாதனின் அனுசரணையுடன் ஆஜராஞர். 2ம் 3ம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் திருமதி சரோஜினி இளங்கோவனின் அனுசரணையுடன் ஆஜராஞர். இறந்தவரின் நலன்கருதி சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் ஆஜராஞர் அரசதரப்பில் யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்எம். எஸ். எம். நிசாம் ஆஜராஞர்.



ஸ்ரார் போர்ட் மோட்டோர் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் கன்ராபியா ஸ்தாபனம் யாழ்.நகரில் நடத்திய பாதுகாப்பான வாகன ஓட்டநிகழ்ச்சி வைபவத்தில் யாழ். நகர மேயர் திரு. இராசா விசுவநாதன் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்த போதுஎடுத்த படம். மேயரை சிறுமி மலர் மாலை சூட்டி வரவேற்கிறுர்.

## நவராத்திரி

(யாழ்ப்பாணம்)
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் 9-ந் திகதி நவராத்திரிவிழா ஆரம்பமாகி தொடர்ந்து பதினெரு நாட்கள் வரை நடைபெறும். தினமும் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளின் விரிவுரைகள் இடம்பெற்று 19-ந் திகதி விஜயதசமி தினத்தில் மிகிஷமர்தனியாகி ஸ்ரீ தையல் நாயகி கன்னிவாழை வெட்டி வீழ்த்தி மானம்பூ விழாவை நடாத்துவர்.

## பயிற்சி

றேடியோ-டெலிவிசன், எயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம். 18-10-80 அனைவரும்சேரலாம், நாஷனல் அக்கடமி, 11,மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7041

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

## வலைத்திருட்டு: இருவர் கைது

[மாவிட்டபுரம்]
தியேட்டரில் படம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவர் இடைநடுவில் பொலிசாரின் விருந்தாளியாக மாறிஞர்!

பலாலியில் இடம்பெற்ற வலைக்களவு தொடர்பாக தேடப்பட்டுவந்த ஏ. சின்னராஜா என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

பலாலியைச்சேர்ந்த நேசன் செல்வராசா என்பவரது 6000 ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் கடலில் விரிக்கப்பட்டிருந்தபோது இனந்தெரியாதவர்களால் அறுத்துச் செல்லப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணைசெய்த காங்கேசன்துறைப் பொலிசார் மேற்படி வலைகளில் ஒருபகுதி மயிலிட்டியில் புதைக்கப்பட்டிருந்து மீட்டதுடன், பீட்டர் புலேந்திரன் என்பவரையும் ஏற்கனவே கைதுசெய்திருந்தனர். இது தொடர்பாகதேடப்பட்ட மற்ருெரு நபரான ஏ. சின்னராசா என்பவர் காங்கேசன்துறை படமாளிகையில் படம்பார்த்துக் கொண்டிருந்தபோதுகைதுசெய்யப்பட்டார்.

இருவரும் மல்லாகம்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம் 20ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

## தமிழ்நாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ணத்தில் தந்தை நினைவாலயத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்துவார். தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது உயிர்த்தவர்களின் நினைவுச் சின்னத்திற்கும் அவர் அஞ்சலி செலுத்துவார். பின்னர் யாழ் மாநகரசபை அளிக்கும் தேநீர் விருந்தில் கலந்து கொண்ட பின் இன்று மாலையே ரயில் மூலம் கொழும்பு திரும்புவார் என்று தெரிகிறது.

## ஈராக்-ஈரான்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### 20,000 இந்தியர்கள்

ஈராக்கில் இருபதினுயிரம் இந்தியர்கள் இராக்கிறுர்கள் என்றும், இவர்களில் இரண்டாயிரம் பேர் மட்டுமே தாய

## வலைத்திருட்டைத் தடுக்க மாநாடு

(மாவிட்டபுரம்)
மாதகல் தொடக்கம் பருத்தித்துறை வரையிலான கடற் பிரதேசத்தில் அடிக்கடி நடைபெறும் வலைத்திருட்டை எவ்வாறு நிறுத்தலாமென்பது பற்றிய மாநாடு ஒன்று இம்மாதம் 12ம் திகதி ஊறணி எமிலியானுஸ் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தரால் கூட்டப்படும் இம்மாநாட்டில் மீன்பிடி இலாகா உயர் அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், கிராமசேவகர்கள், கடற்ருெழிலாளர் பிரதிநிதிகள் போன்ருேர் பங்கு பற்றி வலைத்திருட்டை நிறுத்துவது குறித்து ஆராய்வார்கள்.

## இன்று நல்லூர் வங்கி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கி இன்று மீண்டும் திறக்கப்படுகிறது. யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கி முகாமையாளர் இதனைத் திறந்து வைப்பார். (அ)

## யுத்தம்...

க திரும்பியுள்ளனர் என்றும் மிகுதிப் பேர் தாயகம் திரும்பவில்லை என்றும் பாக்தாத்திலுள்ள இந்திய தூதரக உயர் அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
திருமதி சிறிமா பண்டாரநாயக்கா; தமது குடியுரிமையைப் பறிக்க வகை செய்யும் விசேட ஜனதிபதியின் தீர்மானத்தை ரத்துச் செய்யுமாறு கோரியுள்ளார்.

'இம்மாதம் பதினுரும் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் (குடியுரிமை ரத்துச் சம்பந்தமான) விவாதத்தை சபாநாயகர் தடை செய்யவேண்டும் என்று கோரும் இடைக்கால உத்தரவை வழங்குமாறும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டுள்ளார்.

'விசேட ஜனதிபதி கமிஷன் விசாரணைகள் ஒரு தலைப்பட்சமானது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான-அதே கட்சியின் செல்வாக்குப் பெற்ற பலம்வாய்ந்த ஒரு கட்சியை பலவீனப்படுத்தும் நோக்கத்துடனேயே விசேட ஜனதிபதி கமிஷன் விசாரணைகள் நடைபெற்றுள்ளன, ஐ. தே. கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஒருவர்தான் விசேட ஜனதிபதி ஆணைக்குழுவின் பிரதம வழக்குத் தொடுநராகக் கடமையாற்றியுள்ளார். அரசியல் ரீதியாக நஷ்டம் ஏற்படுத்துவதே இக்கமிஷனின் நோக்கமாக இருந்திருக்கிறது' என்று திருமதி சிறிமாவோ தமதுமனுவில் தெரிவித்துள்ளார். (ம)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. GB 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org